**செய்தி வெளியீடு எண்:149** **நாள்–26.2.2009**

# தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்

(விழுப்புரம்) லிமிடெட்., விழுப்புரம் - 605602.

சென்னை சுற்றுலா - பேருந்து வசதி - செய்திக்குறிப்பு

சென்னையில் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களையும், முக்கிய சுற்றுலாத் தலங்களையும் மற்றும் வணிக வளாகங்களையும் சுற்றுலாப் பயணிகள் சிரமமின்றி, வசதியாக கண்டுகளிக்க ஏதுவாக முதன் முதலாக தமிழகத்தில் சென்னையில் சிறப்பான **“மகிழ்வுந்து உலா”** வசதியை அளிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட்., விழுப்புரம் மூலம் 25.02.2009 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சேவையை **மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்** தலைமையில் **மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர்** முன்னிலையில், **மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்** அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து 25.02.2009 அன்று முதல் இயக்கப்படுகிறது. முதற்கட்டமாக நான்கு குளிர்சாதன வசதியுடன் கூடிய சொகுசுப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

**<u>இயக்கப்படவுள்ள முக்கிய சுற்றுலா தலங்கள் பின்வருமாறு</u>**

| | |
|---|---|
| **சென்னை உயர்நீதிமன்றம்** | **அஷ்டலட்சுமி கோயில்** |
| **புனித ஜார்ச் கோட்டை** | **தொழிற் பூங்கா (டைட்டல் பார்க்)** |
| **மெரினா கடற்கரை** | **கிண்டி தேசிய வனவிலங்கு உயிரியல்** |

| | |
|---|---|
| | **பூங்கா** |
| **பார்த்தசாரதி கோயில்** | **பிர்லா கோளரங்கம்** |
| **சுவாமி விவேகானந்தா நினைவு இல்லம்** | **தியாகராய நகர் (பனகல் பார்க்)** |
| **சாந்தோம் புனித தேவாலயம்** | **வள்ளுவர் கோட்டம்** |
| **தியொசோபிக்கல் சொசைட்டி** | **அரசினர் அருங்காட்சியகம்** |
| **கபாலீஸ்வரர் கோயில்** | **ரிப்பன் மாளிகை** |

முதலில் 45 நிமிட இடைவெளியில் ஒரு பேருந்து என்ற நிலையில் இயக்கப்படும். ஒவ்வொரு பேருந்தும் ஒரு குறிப்பிட்ட சுற்று தடத்தில் சீரான இடைவெளி நேரத்தில் இயக்கப்படும். சுற்றுலா பயணிகள் பேருந்திலிருந்து மேலே குறிப்பிடப்பட்டுள்ள எந்த இடத்தில் வேண்டுமானாலும் இறங்கிக் கொள்ளலாம். அங்கு பார்க்க வேண்டிய முக்கிய இடங்களை பார்த்துவிட்டு பின்னர் வருகின்ற சுற்றுலாப் பேருந்துகளிலும் ஒரு நாளைக்கு பயணம் செய்யலாம் ( **8 a.m to 8 p.m**) மீண்டும் மீண்டும் பயணச்சீட்டு பெற வேண்டியதில்லை. இந்த சுற்றுலாவிற்கான பயணச்சீட்டுகளை மாநகர போக்குவரத்துக் கழக பேருந்து நிலையங்களில் உள்ள பயணச்சீட்டு விற்பனை அலுவலகங்களிலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக பயணச்சீட்டு விற்பனை அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் ஒவ்வொரு பேருந்திலும் தேர்ந்த பயிற்சிப் பெற்ற சுற்றுலா வழிகாட்டும் நபர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதனால் சென்னைக்கு புதியதாக வருகின்ற குறிப்பாக தமிழ் மொழி அறியாத வெளிநாட்டு மற்றும் வெளி மாநில சுற்றுலா பயணிகளுக்கு மிகவும் உதவியாகவும், மகிழ்ச்சியான பயணத்திற்கு ஏதுவாகவும் இருக்கும்.

இந்த புதிய வசதியை சுற்றுலா பயணிகள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளும்படி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் (விழுப்புரம்) கழகத்தின் மேலாண் இயக்குநர் திரு.சி.பரமசிவம் அவர்கள் தெரிவித்தார்.

''''''''

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9